*இப்பரீட்சை தொடர்பில் மேற்குறிப்பிட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பின்படி விண்ணப்பதாரர்களினால் ஒப்படைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் செல்லுபடியாவதுடன் அவ்விண்ணப்பதாரர் மீளவும் இது தொடர்பில் விண்ணப்பித்தல் அவசியமன்று.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைகள் குழுவின் உத்தரவின்படி,*

பேராசிரியர் கே. கபில சி. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

*2020, நவெம்பர் 25.*

*12-84*

திருத்தம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

நெல் மற்றும் தானியங்கள், கரிம உணவு, காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப வேளாண்மை இராஜாங்க அமைச்சு

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதன் பொருட்டான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2020**

2,200 என்னும் இலக்கமுடைய ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள "கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்ளம் பொருட்டான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2020" என்னும் பரீட்சை அறிவித்தலில் 1 ஆவது பந்தியின் 1.1 ஆவது பகுதி, நாட்டினுள் நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

1.1 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021, சனவரி மாதம் 15 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திகதி.- இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் திகதியில் நடாத்தப்படும்.

02. இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய ஏற்பாடுகளில் மாற்றங்கள் இன்றி அவ்வாறே நடைமுறையில் இருக்கும்.

டபிள்யூ. எம். எம். பீ. வீரசேகர,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை,
த. பெ. 537,
கொழும்பு 07,
2020, நவெம்பர் 27.

12-04/1

---

திருத்தம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

நெல் மற்றும் தானியங்கள், கரிம உணவு, காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப வேளாண்மை இராஜாங்க அமைச்சு

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - சேவைகள் தொகுதி 2 (MN-01-2016A) இன் கீழ் விவசாய ஆராயச்சி உற்பத்தி உதவியாளர் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை -2020**

2,200 என்னும் இலக்கமுடைய ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள "கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத- சேவைகள் தொகுதி 2 (MN-01-2016A) இன் கீழ் விவசாய ஆராயச்சி உற்பத்தி உதவியாளர் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான அறிவித்தலைத் திருத்தம் செய்தல்.

02. 8 ஆம் பந்தியின் 8.1 ஆவது பகுதி, கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

8.1 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021, சனவரி மாதம் 15 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திகதி.- இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் திகதியில் நடாத்தப்படும்.

03. மேற்படி அறிவித்தலில் 2 ஆம் பந்தியின் 2.5 ஆவது பகுதி தேர்தல்க்ள ஆணையாளர் நாயகத்தின் PE/1/25/2020 என்னும் இலக்கமுடைய 19.11.2020 ஆந் திகதிய கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைவாக நடவடிக்கைளை மேற்கொள்ளும் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

2.5 – சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 06 வருட காலப்பகுதியினுள் விண்ணப்பிக்கம் மாவட்டத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட காலங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதனை தமது வதிவிடப் பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவிடம் மற்றும் நற்சான்றிதழ் தொடர்பான கிராம அலுவலரின் சான்றிதழின் (DS4 படிவம்) மூலம் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

04. இவ்வர்த்தமானியின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் 9 ஆம் பந்தி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

9. பரீட்சைக் கட்டணம்.- விண்ணப்பதாரியினால் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 600.00 பணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் வருமானத்திற்கு வைப்பிலிடும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தில் அல்லது உப தபால் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படம் பற்றுச்சீட்டை, அதன் ஒரு நுனிப் பகுதியை விண்ணப்பப்படிவத்தின் விதித்துரைக்கப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சையின் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சையின் பொருட்டு செலுத்தப்பட்டுள்ள கட்டணம் எக்காரணம் கொண்டம் மீளக் கொடுப்பனவு செய்தல் அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றுதல் செய்யப்படமாட்டாது. எதிர்காலத் தேவையின் பொருட்டு பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருத்தல் சாலச்சிறந்ததாகும்.

05. வர்த்தமானியின் சிங்கள மொழி மூலமான மாதிரி விண்ணப்பப்படிவத்தில் “11 பரீட்சைகள் கட்டணம்” என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள “செலுத்தப்பட்ட கமநல சேவைகள் நிலையம்” என்பது “செலுத்தப்பட்ட தபால்/உப தபால் அலுவலகம்” எனத் திருத்தம் செய்யப்படுகின்றது.

06. இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய ஏற்பாடுகளில் மாற்றங்கள் இன்றி அவ்வாறே நடைமுறையில் இருக்கும்.

டபிள்யு. எம். எம். பீ. வீரசேகர,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை,
த. பெ. 537,
கொழும்பு 07,
2020, நவெம்பர் 27.

12-04/2

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## இலங்கைப் பொறியியல் சேவையின் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2020

நாடு முழுவதும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சிவில்,இயந்திரவியல்,மின்னியல் (கனதி மற்றும் இலகு), இரசாயன மற்றும் பூகோள வளங்கள் ஆகிய பொறியியல் வகுதிகளுக்குரிய பதவிகளுக்கு நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக தகைமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தலானது 2020.12.04 ஆம் திகதி 8.00 மணித்தியாலத்திலிருந்து 2021.01.04 ஆம் திகதி 24.00 மணித்தியாலம் வரை www.slida.lk என்ற இணைய தள வழிமுறையின் (online) மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

திறந்த அடிப்படையில் இலங்கைப் பொறியியல் சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் பூரணப்படுத்த வேண்டிய இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தர பதவிகளின் தொகை 221 என்பதோடு அது கீழ் காட்டப்பட்டுள்ளவாறு வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிவில் | 170 |
| இயந்திரவியல் | 30 |
| மின்னியல் (கனதி மற்றும் இலகு) | 11 |
| பூகோள வளங்கள் | 9 |
| இரசாயன | 1 |
| மொத்தம் | 221 |

**1. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**

**1.1** திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக குறித்த பாடப்பரப்புக்களின் கீழ் தொழிற்சார் தகைமை பெற்ற பொறியியலாளர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்படுவர். நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கையினர் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்களின் சிறு தொகையினரை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

**1.2** நியமனம் வழங்குவது தொடர்பாக ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகளின் ஒழுங்கு முறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது பற்றி பரீட்சிக்கப்பட்டதன் பின்னரே உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவர்.

**2. சேவை நிபந்தனைகள் :**

**2.1** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1836/6 மற்றும் 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதும், எதிர்வரும் காலங்களில் மேறகொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், கீழ்ப்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

**2.2** இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடரந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு தாங்கள் உட்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

**2.3** இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்றாண்டுகள் (03) தகுதி காண் காலத்திற்குக் கீழ்ப்படுவதுடன், மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

**2.4** 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏனைய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தை மூன்றாண்டுகளில் (03) பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களினால் தகுதிகாண் காலத்தினுள் ஒரு அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**2.5** அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் அனைத்து கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

**2.6** நியமனத்தைப் பெறுபவர்கள், இந்நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

**2.7** நியமனம் பெற்றவர்கள், அரசாங்க சேவையைப் போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டவர்களாவர்.

**2.8** தாம் நியமிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும் / அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற அல்லது தவிர்க்கின்ற நியமனம் பெறுநர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

**3. சம்பள அளவுத்திட்டம்.-**

இப்பதவிக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைய, SL-1-2016 ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2170 - ரூபா 110,895/= ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும்.

எவ்வாறாயினும், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் பூரண தொழிற் தகைமைகளைப் (பட்டயப் பொறியியலாளர் நிலை) பெற்றுள்ள அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் பொறியியலாளராக பூரண தொழிற் தகைமைகளைப் பெற்ற உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்தின் ஆறாவது (06) சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படுவர்.

**4. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள:**

**4.1 கல்வித் தகைமைகள் :**

4..1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்ககப் பட்ட பல்கலைக்கழகம் ஒனறில் இருந்து, அவ் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நான்காண்டுகால (04) முழுநேர பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை ஆட்சேர்க்கப்படும் பாடவிதானத்தின் கீழ் வெற்றிகரமாக பூர்த்தி செய்து பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4..1.2 மேற்படி 4.1.1. இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறு வகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாட விதானத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**4.2 தொழிற் தகைமைகள் :**

4..2.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்ககப் பட்ட பல்கலைக்கழகம் ஒனறில் இருந்து, அவ் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நான்காண்டுகால (04) முழுநேர பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை ஆட்சேர்க்கப்படும் பாடவிதானத்தின் கீழ் வெற்றிகரமாக பூர்த்தி செய்து பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.2.2 இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை அது சம்பந்தமான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெற்றுள்ளமை பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந் நிறுவனததினால் வழங்கப்படும் செல்லுபடியான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**5. வயதெல்லை :**

5.1 விண்ணப்பம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5.2 எவ்வாறாயினும், 2013.11.11 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்துள்ள அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் (அதாவது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக (முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர்) அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவி வகிக்கும் உத்தியோகத்தரொருவராக அல்லது ஏனைய அரசாங்க சேவையின் / மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய நியமன அதிகாரியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகைமை பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு) உச்ச வயதெல்லை 45 ஆகும்.

**6. தேகாரோக்கிய தகைமைகள்:**

6.1 எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் தேகாரோககியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**7. பிற தகைமைகள் :**

7.1 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

7.2 சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

7.3 மேலே 4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு உரிய சான்றிதழ்களை வழங்குவதற்கு காரணியாயமைந்த பூரண விபரங்களடங்கிய பெறுபேற்று ஆவணங்களில் (Academic transcript) அடங்கியுள்ள பாடங்கள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சேவை வகுதிக்கான தேவைப்பாடுளுடன் எல்லா வகையிலும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

7.4 ஏதேனும் சமயப் பிரிவொன்றின் போதகராக பதவி வகிக்கும் ஒருவர் விண்ணப்பிப்பதற்கு தகைமைபெற மாட்டார்.

7.5 மேலே இல. 5.2 இன் கீழ் தகைமை பெறும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் தமது சேவையில் உறுதிபடுத்தப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அச்சேவையில் உடன் முன்னரான 05 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.6 விணணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில்(2021.01.04) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**8. எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை :**

**8.1 எழுத்துமூலப் பரீட்சை :**

8.1.2 இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

8.1.2 மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் விஞ்ஞான கற்கை மூலம் பெற்றுக்கொண்ட அறிவின் அடிப்படையில் விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான, பகுப்பாய்வுத் திறன், தீர்மானம் எடுக்கும் திறமை என்பவற்றை கணிக்கும் நோக்கினைக் கொண்ட இப்பரீட்சைக்கான புள்ளிகள் 100 இனைக் கொண்ட எழுத்து மூல பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். வினாத்தாளானது பல்வகை வினாக்களைக்கொண்டதாக அமைவதோடு, அதற்கான காலம் 1½ மணித்தியாலங்கள் வழங்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**8.2 நேர்முகப் பரீட்சை :**

8.2.1 விண்ணப்பதாரர்களஎழுத்துமூலப் பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

8.2.2 இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிபபினதும் மற்றும் அதற்கமைய வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், உடற்தகைமைகள் பற்றியும் பரீட்சிக்கப்படும்.

8.2.3 இந்த நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது

8.2.4 அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிககப்படும் நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

8.2.5 பரீட்சார்த்தியொருவரினால் நேர்முகப் பரீட்சையின்போது குறித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்வனைத்து ஆவணங்கள் / சான்றிதழ்கள் எல்லா விதத்திலும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரியின் தழுவல் அங்கீகாரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணமும் / சான்றிதழ்களும் செல்லுபடியாகாது.

8.2.6 பரீட்சார்த்திகள் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உசிதமான தீர்மானம் எடுக்கப்படுவதுடன், அதுவே இறுதியான தீர்மானமாகும்.

9. **பரீட்சை நிபந்தனைகள்** :

9.1 இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அலுவலக இணைய தளமான www.slida.lk இற்கு பிரவேசிப்பதன் மூலம் மட்டுமே மேற்கொள்ள முடியும்.இணைய தளத்தின் முதற்பக்கத்தின் வலது பக்கத்தில் நிரலில் காணப்படும் "Examination" இன் ஊடாக பரீட்சைப் பிரிவு (Examination Division) இற்கு பிரவேசித்து தனக்குரிய பரீட்சையைத் தெரிவு செய்து விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்த முடியும். (இணைய தளவழிமுறையின் (online) மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும்.)

9.2 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.3 பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமும்,அரசாங்க சேவைகள்,மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் வங்கிக்கணக்கில் பணத்தை செலுத்த வேண்டும். வங்கிக்கணக்கில் பணம் வைப்புச்செய்யும் பற்றுச் சீட்டில் பண வைப்புப் பற்றுச்சீட்டில் வைப்புச் செய்பவரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட வேண்டிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

**குறிப்பு** : பணம் வைப்பிலிடும்போது பின்வரும் தகவல்களை நிதிவைப்புப் பற்றுச்சீட்டில் (Cash Deposit Slip) உள்ளடக்கவும்.

| | | |
|---|---|---|
| கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | : | செயலாளர், அரசாங்க சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| கணக்கு வைத்திருப்பவரின் முகவரி | : | சுதந்திர சதுக்கம், கொழும்பு 07. |
| கணக்கு இலக்கம் | : | 7040712 |
| கணக்கு வைத்திருப்பவரின் முகவரி | : | சுதந்திர சதுக்கக் கிளை |
| வைப்பிலிடுபவரின் பெயர் | : | (வைப்புச் செய்பவரின் பெயர் உள்ளடக்குதல் வேண்டும்.) |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் | | |

9.4 விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் செயற்பாடு சம்பந்தமாக ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுமிடத்து அது சம்பந்தமாக தொடர்பு கொள்வதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 2020.12.04 ஆம் திகதியிலிருந்து 2021.01.04 ஆம் திகதி வரை வார அலுவலக நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப 16.15 வரை தொடர்பு கொள்வதற்காக திறந்திருக்கும்.

9.5 **மிக முக்கியமானது**

**விண்ணப்பங்களை முறைபடி இணைய தள வழிமுறையின் (online) மூலம் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் இணைய தள பக்கத்தில் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் தமக்குரிய பரீட்சை அனுமதி அட்டையினை பதிவிறக்கம் (Down Load) செய்துகொள்ள முடியும். பதிவிறக்கம் செய்த பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தில் கையளிக்க வேண்டியுள்ளதால் அதனைப் பத்திரமாக வைத்துக்கொள்ளும்படி விண்ணப்பதாரருக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. வேறு எந்த பரீட்சை அனுமதி அட்டையும் தபால் மூலம் அனுப்பப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்க.**

9.6 அந்த அனுமதி அட்டையை அச்சுப்பதிவிட்டு (Print out) அரச சேவை / மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களால் தமது திணைக்கள / நிறுவன தலைவரினூடாகவும் அவ்வாறல்லாத ஏனைய விண்ணப்பதாரர்கள் அரசாங்கப் பாடசாலை ஒனறின் அதிபர் / சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சடடத்தரணி, பிரசித்த நொத்தாரிசு முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலீஸ் சேவையின் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய அதிகாரியொருவர் அல்லது நிரந்தர பதவியையுடைய பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது பிற மதங்களைச் சேர்ந்த சமயத்தலங்களுக்குப் பொறுப்பான பதவியிலுள்ள ஒருவரினால் பரீட்சை அனுமதி அட்டையிலஉறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9.7 பரீட்சை தொடர்பாக செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது.

9.8 இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சைத் திகதி இடம் என்பன தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அறிவிக்கப்படும்.

9.9 அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்துக்கு நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிபடுத்தப்பட்ட அனுமதியட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கவனிக்கவும்** : பரீட்சார்த்தி ஒருவருக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்படுவது என்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என கருதப்படலாகாது.

9.10 மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கேட்கப்படும் ஏதாவது தகவல்களை உறுதிபடுத்துவதற்காக தம் வசமுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைத் தயாராக வைத்திருப்பது பிரயோசனமாக அமையும். அதனைக் கேட்கும் பட்சத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறினால் பரீட்சார்த்தியின் பரீட்சை நுளைவானது இரத்துச்செய்யப்படும்.

9.11 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்பேரில பரீட்சையை நடாத்துதல், பிற்போடுதல் அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு உண்டு.

9.12 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடுதல் என்பன தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன் அவை மீறப்படும் பட்சத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் ஆளாக நேரிடும்.

9.13 **விணணப்பதாரரின் ஆளடையாளம்** .:- பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தினை நிரூபிக்குமாறு கோரப்படுவார். பின்வரும் ஆவணஙகளில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்

I. தேசிய ஆள் அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

10. **பொய்யான தகவல்களை வழங்குவதற்காளன தண்டனை :**

யாரேனும் ஒரு விண்ணப்பதாரி தகைமைகள் அற்றவர்என நிரூபிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் எந்த நேரத்திலும் அவரது விண்ணப்பத்தினை

நிராகரிப்பதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயம் பொய்யானது என தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவரின், அவ்வாறின்றி ஏதாவது முக்கிய விடயம் அவரால் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் இடமுண்டு. அவ்வாறே அவ்வேளையிலும் அவருக்கு வேதனம் அல்லது வேறு ஊதியமாக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டிருப்பின் அந்த பணம் முழுவதையும் அவரிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கைப் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

12. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பெறுபேறு வெளியிடப்படும் திகதியை அறிவித்து அனுப்பிய பிறகு, எழுத்துமூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் அடங்கிய பெறுபேறு பரீட்சை எழுதிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்பிவைப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. இந்த ஒழுங்கு விதிகளுக்குட்படாத ஏதாவது விடயங்கள் இருப்பின் அது பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கிணங்க, அரசாங்க சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான விளம்பரமே வலுவானதாகவிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே.ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவை,மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிஅமைச்சு.

அரசாங்க சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிஅமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020 ............................... ஆம் திகதி

---

திருத்தம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

நெல் மற்றும் தானியங்கள், கரிம உணவு, காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப வேளாண்மை இராஜாங்க அமைச்சு

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - சேவைகள் தொகுதி 2 (MN-01-2016) இன் கமநல சேவைகள் நிலைய முகாமைத்துவ உதவியாளர் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை -2020**

2,200 என்னும் இலக்கமுடைய ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள "கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத- சேவைகள் தொகுதி 2 (MN-01-2016A) இன் கீழ் கமநல சேவைகள் நிலைய முகாமைத்துவ உதவியாளர் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை - 2020" என்னும் பரீட்சை அறிவித்தலில் 8 ஆவது பந்தியின் 8.1 ஆவது பகுதி, நாட்டினுள் நிலவும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

8.1 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021, சனவரி மாதம் 15 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திகதி.- இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் திகதியில் நடாத்தப்படும்.

02. இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய ஏற்பாடுகளில் மாற்றங்கள் இன்றி அவ்வாறே நடைமுறையில் இருக்கும்.

டபிள்யூ. எம். எம். பீ. வீரசேகர,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை,
த. பெ. 537,
கொழும்பு 07,
2020, நவெம்பர் 27.

12-04/3

---

## திருத்தம்

### அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்குச் ஆட்சேர்ப்பு செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2, 194 மற்றும் 2020.09.18 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020) இல் இணைத்துக் கொள்வதற்கான அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2020.12.31 ஆந் திகதியாகும்.

8. (iii) விண்ணப்பதாரிகள் 2020.10.19 ஆந் திகதிக்கு அதிகபட்ச வயதெல்லையை தாண்டாதிருத்தல் வேண்டும் என்பதோடு, விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் இத்திருத்தம் காரணமாக மற்றுமொரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2020, திசெம்பர் 01.

12-276

# திருத்தம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்குச் ஆட்சேர்ப்பு செய்வதற்கான
மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2, 194 மற்றும் 2020.09.18 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020 இல் இணைத்துக் கொள்வதற்கான அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2020.12.31 ஆந் திகதியாகும்.

7. (iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்;

7. (iv) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவியில் இணைத்துக் கொள்வதற்காக அவசியப்படும் சகல தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் இத்திருத்தம் காரணமாக மற்றுமொரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2020, திசெம்பர் 01.

12-277

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.
2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.
3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.
4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.
5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.
6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**
8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.
10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.
12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**
13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**
14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2020**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 04.12.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.11.2020 |
| | | வெள்ளி | 11.12.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.11.2020 |
| | | வெள்ளி | 18.12.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.12.2020 |
| | | வியாழன் | 24.12.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.12.2020 |

**அட்டவணை - 2021**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 01.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.12.2020 |
| | | வெள்ளி | 08.01.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.12.2020 |
| | | வெள்ளி | 15.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.01.2021 |
| | | வெள்ளி | 22.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.01.2021 |
| | | வெள்ளி | 29.01.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.01.2021 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 05.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.01.2021 |
| | | வெள்ளி | 12.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.01.2021 |
| | | வெள்ளி | 19.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.02.2021 |
| | | வெள்ளி | 26.02.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.02.2021 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.